மாநகராட்சி மன்று
0 -2-1993

# 680 மெ. தொன் உணவுப் பொருள் மாத்திரமே கையிருப்பில் - அரச அதிபர்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2028 தை 24 இதழ் 361
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 06 — 02 — 1993

(யாழ்ப்பாணம்)

''யாழ். குடா நாட்டிற்கு குறைந்தது 12 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருள் தேவையாகவுள்ளது. ஆனால் யாழ். குடா நாட்டு உணவுக் களஞ்சியங்களில் அரிசி கையிருப்பில் இல்லை. இது தவிர 680 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களே கையிருப்பில் உள்ளன''

யாழ் அரச அதிபர் யாழ். குடா நாட்டில் தற்போதுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறுவர் போஷாக்கு நிலை ஆராயப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாப்பகுதியில் உள்ள சிறுவர்களின் போஷாக்குப் பற்றாக்குறை பற்றிய ஆய்வுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவவியல் துறையினர் இவ் ஆய்வினை மேற்கொண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

# பலாலி முகாமிலிருந்து 23 பேர் நேற்றுவிடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 23 தமிழ் இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரி திரு. சுவாமிகோவிடம் கையளிக்கப்பட்டனர்.

தற்போது பலாலி இராணுவ முகாமுக்குச் சென்றுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் இந்த 23 பேரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் விடுதலை

[4-ம் பக்கம் பார்க்க]

## தேர்தலை சந்திப்பதற்காக

# தொடர்புச் சாதனங்கள் மீது பிரேமாவின் தாக்குதல் ஆரம்பம்

(கொழும்பு)

விரைவில் தேர்தல் ஒன்றை சந்திக்கும் நோக்குடன் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தனது அரசியல் சதுரங்க ஆட்டத்தை ஆரம்பித்துள்ளார். இதன் முதல்கட்டமாக தனக்கு எதிராக செயல்படும் தொடர்பு சாதனங்கள்மீது தாக்குதல்களையும் அவர் ஆரம்பித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விரைவில் ஒரு தேர்தலை சந்திக்கும் நோக்கமாகவே தனக்கு எதிராக செயற்படும் பத்திரிகைகள் மீதும் சமீப காலமாக தாக்குதல்தொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வரவிருக்கும் தேர்தல் ஜனாதிபதிக்கான தேர்தலாக இருக்கலாம் அல்லது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலாக இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும் தமது அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்காத சூழ்நிலையை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

இதற்கிடையில் அரசுக்கு எதிரான பத்திரிகை நிறுவனங்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட மாணவருக்கு சீருடை 10ம் திகதி புதன்கிழமை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான சீருடை எதிர்வரும் 10ம் திகதி புதன்கிழமை காலை 10மணிக்கு அவரவர் பாடசாலையில் வழங்கப்படும்.

சகல அதிபர்களும் எதிர்வரும் 8ம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தவறாது தத்தம் கோட்டக்கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களை சந்தித்து இதுபற்றிய அறிவுறுத்தல்களைப் பெறுமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் இதுவரை அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள்

((4-ம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை பொம்மர் தாக்கு காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் கடந்த 2ம் திகதியன்று இடம்பெற்ற பொம்மர்குண்டு வீச்சுத்தாக்குதலில் காயப்பட்ட ஆறு பொதுமக்களும் அங்கிருந்து அழைத்துவரப்பட்டு நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில்

(4-ம் பக்கம் பார்க்க

## தமிழ்நாடு மற்றொரு ஈழமாக மாறும் பாட்டாளி மக்கள் கட்சி செயலர் எச்சரிக்கை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியை இந்திய அரசு தடைசெய்தால் தமிழ்நாடு மற்றொரு ஈழமாக மாறும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் செயலாளர் பேராசிரியர் பேரன், இந்திய அரசை எச்சரிக்கை செய்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சென்னையில் விரைவில் ஊர்வலமும், அஞ்சலிக்கூட்டமும் நடாத்தவுள்ளோம்.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு தடைவிதிக்கப்பட்டால் இலங்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை இளங்கலைமன்றம்: கலாமண்டப திறப்புவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் கலா மண்டப திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலா மண்டபத்தை திறந்து வைப்பார்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 3 மணிக்கு பிரம்மஸ்ரீ ந வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளன. சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானமும் பொ. ஐங்கரநேசனும் கலந்து கொள்வார்கள்.

மங்கள இசை, பஜனை, இன்னிசைக் கச்சேரி ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பேராதனை பல்கலைக்கழகம்: வெளிவாரி பரீட்சைகள் பின் போடப்பட்டன

திருநெல்வேலி)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான ஏப்ரல் மாதம் நடைபெற இருந்த பரீட்சைகள் யாவும் பின்போடப்பட்டுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிஷ்கரிப்புகளினால் மேற்படி பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதேவேளை சென்ற ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய ஜி. ஏ. கியூ. மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

## ஜெயலலிதாவின் எம். எல். ஏ. பதவி மத்திய அரசின் பரிசீலனையில்

[சென்னை]

தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எம் எல். ஏ. பதவியை இழந்து விட்டார் என்று மத்திய அரசு அறிவிக்க வேண்டுமென டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி விடுத்த கோரிக்கை தற்போது சூடுபிடித்துள்ளது.

தமிழ்நாட்டு ஆளுநர் பீஷ்மர் நாராயண்சிங்கிடம் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி விடுத்த மேற்படி கோரிக்கை மத்திய அரசினால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டுவருவதாகவும் இதுபற்றிய முடிவு இன்னும் ஓரிருவாரங்களில் வெளியிடப்படுமென்றும் மத்திய அரசின் வழக்கறிஞர் மிலான் பலாஜி சென்னையில் தெரிவித்துள்ளார். (வி)

(157)

## வரிவிளம்பரம்

### கறுப்புப் போத்தல்

அரைப் போத்தல் திரவம் கொள்ளக்கூடியது. விற்பனைக்குண்டு. –மில்க்வைற். (எ2852)

### தைப்பூசம்

பாலர் கல்விக் கழகத்தால் நடாத்தப்படும், பாடசாலைகள் 6ம் திகதி தைப்பூசத்தன்று (சனிக்கிழமை) காலை 9-00 மணிக்கு புதிதாக பாலர்களைச் சேர்ப்பதற்காகப் பாடசாலை நடைபெறும். (கி7194)

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தர வாதத்துடன் குறித்த தவணையில் ஒடருக்கு, சலுகையுடன் செய்து தரப்படும். தரகர் தேவையில்லை நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-7198)

## மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்க 2-வது ஆண்டு மலர் வெளியீட்டுவிழா 6-ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலவரங்கள் காரணமாக

# 4800 தமிழர் பம்பாயிலிருந்து சென்னைக்கு இடம் பெயர்வு

(சென்னை)

பம்பாயில் இடம்பெற்ற கலவரத்தையடுத்து 4,800க்கு மேற்பட்ட தமிழர்கள் சென்னைக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு உதவும் நடவடிக்கையில் தமிழக மாநில அரசு ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அயோத்தி பாபர் மசூதி அழிப்பு சம்பவத்தை அடுத்து இந்தியாவின் பல மாநிலங்களில் ஏற்பட்ட இனக்கலவரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பம்பாயில் கலவரம் தொடர்ந்ததினால் 4, 800 தமிழர்களும் சென்னைக்கு இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரி)

## உழவர் விழா

(உடுவில்)

தைப்பூசத் தினமான இன்று சனிக்கிழமை கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தில் 'உழவர் பெருவிழா' கொண்டாடப்படவுள்ளது.

தொழிலதிபர் கலாநிதி க. கனகராசா, யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வர். கலைப் பேரரசு திரு. ஏ. பொன்னுத்துரையின் சிறப்புச் சொற்பொழிவும் உழவர் விழா, நடனம், நாடகம் ஆகிய சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (109)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று தைப்பூசத் திருநாளில் இணுவில் கந்தசுவாமி கோவிலில் மாலை 6 மணியளவில் இணுவில் பெரிய சந்நியாசியார் சதுமலை அண்ணமலை வைத்தியர், கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம வடிவேல் சுவாமிகள் ஆகியோரின் திருவுருவப்படங்கள் அண்ணா தொழிலக உரிமையாளர் திரு. நடராசாவினால் கலைஞானி அறங்காவல் குழுவிடம் கையளிக்கப்படும்.

## நல்வாழ்த்துக்கள்!

வடபிராந்திய வர்த்தகஊழியர் சங்கம் இரண்டாவது ஆண்டு நிறைவை யொட்டி வெளியிடவிருக்கும் விசேட மலர் வெளியீட்டு விழாவிற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இச்சங்கத்தின் துரித முன்னேற்றத்தை கண்டு மனமகிழ்ச்சியடைகின்றேன். மென்மேலும் இச்சங்கம் ஊழியர்களை நல்ல முன்னேற்றப் பாதையில் நடத்தி வளர்ச்சிபெற வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

—கொ. க. ஆ. க. நடராசா,
யாழ். வர்த்தகர் சங்க
முன்னாள் தலைவர்.


# இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத் திறப்புவிழாவும் "ராகபாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்
காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை

கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

## நிதியுதவி நிகழ்ச்சி

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை
5-00—6-30 நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: N. K. பத்மநாதன், S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்,
தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்
6-30—8-00 பரதநாட்டியம்:
நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்
நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலாபவனம்)
பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்
8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8-2-93 திங்கள் (இரண்டாம் நாள்)

நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி
தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன், R. S. சுதாகரன்

இசைக்கச்சேரி:
பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்

இன்னிசை வார்ப்புகள்:
இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்
★ மெல்லிசை நிகழ்ச்சி ★
பாடகர்கள்: G. சாந்தன், பௌசி, வர்ண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம் மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்

9-2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள் "இசைவிழா" நடைபெறும்.

7-ம், 8-ம் திகதிகளில்
நிதியுதவிக் கட்டணம்
500/- 250/- மண்டபவாசலில் 100/-

வாழ்த்துகிறோம்
ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,
772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
பொன் சுந்தரலிங்கம்
தலைவர்
(ஏ-2739)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

### புத்தகம் கட்டுபவர் தரம் II பதவி

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து புத்தகம் கட்டுபவர் தரம் II பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-02-26 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**சம்பளத்திட்டம்:**
ரூபா 1865-11x40-2305 (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச்செலவுப்படியுட்பட ஏனைய படிகளும் 15 % சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்).

**கல்வித்தகைமை:**
எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தவராக இருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் 05 ஆண்டுகள் புத்தகம் கட்டுதலில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏழாம் வகுப்பு சித்தியுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் சேவையாற்றியிருப்பதுடன் புத்தகம் கட்டுதலில் அறிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது:**
விண்ணப்ப முடிவுதிகதியில் 40 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**
தொழிற்தேர்வும் நேர்முகப்பரீட்சையும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23 x 10 ச. மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கட்டுப்பாடாக அமையாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993-01-30.
(எ-2850)


# வடபிராந்[...]
# 2-வது ஆண்[...]

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் வர்க்க உணர்வும் முற்போக்குச் சிந்தனையும் கொண்டவர்கள் சிலரினால் வர்த்தக ஊழியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் அடுத்தடுத்து ஏற்பட்ட அசம்பாவிதங்களினால சங்கத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டன. இருந்தும் சங்கம் முற்றாக அழியவில்லை. மாறாக

## வளர்[...]

சங்கம் மெதுவாக[...]
படியாகவும் வளர்[...]
தது.

சங்கத்தின் 'வள[...]
வர்த்தக ஊழியர்க[...]
படை உரிமைகள் [...]
எம்மால் பெறமுடி[...]
வர்த்தக ஊழிய[...]

## நல் ஆசிகள்

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் முன்மாதிரியான தொழிற்சங்க மலர் வெளியீட்டிற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

சங்கம் நீடித்து உழைத்து ஊழியர் நலம் பேண எனது நல்லாசிகள்.

—க சிவப்பிரகாசம்,
உதவித் தொழில் ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

## நிர்வாகசன[...]
## 1992

இடம் இருந்து[...]
இருப்பவர்கள்:

செல்வி ச.சந்திர[...]
திரு. எம். ஜி. [...]
திரன் (டெ. ருளா[...]
திரு என் இர[...]
சந்திரன் (தலை[...]
திரு எஸ் சிவான[...]
ஏ எவ். செல்வரா[...]

இடம் இருந்[...]
நிற்பவர்கள்:

திரு. வ. துரைசி[...]
(அலுவலக உதவிபா[...]
திரு ப. சுப்பிர[...]
யம், திரு என். ம[...]
வரன், திரு இ தி[...]
ராசா, திரு. [...]
அரியசிவம். திரு. [...]
மகேந்திரலிங்கம் [...]
வாக செயலாள[...]
திரு. ச. அம்பி[...]
பாகன் (சமூகமள[...]
வில்லை.)

## வாழ்த்துச் செய்தி

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் இரண்டாவது ஆண்டு நிறைவை எய்தி இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இச்சங்கத்தின் பன்முகப்பட்ட பணிகளை வாழ்த்துவதோடு 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதைக் கருத்தில் கொண்டு மேலும் மேலும் பணியாற்ற வேண்டுமென்று வேண்டி சங்கத்தை வாழ்த்தி அமைகிறேன்.

— செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## மலர் வெளியீட்[...]


**வீனஸ் விற்பனை நிலை[...]**
358, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

**அறிவகம்**
374, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

**மலாயன் கபே**
பெரிய கடை யாழ்ப்பாணம்

**கணகரன் பிடவை மாளி[...]**
பெரிய கடை,
யாழ்ப்பாணம்

**சில்வர் ஸ்ரோர்[...]**
அருச்சுனா வீதி, யாழ்ப்பாண[...]

# ...்திய வர்த்தக ஊழியர் சங்கம்

## ...டு மலர் வெளியீட்டு விழா சிறப்பிதழ் (06-02-93)

## ...ச்சிப் பாதையில் வர்த்தக ஊழியர் சங்கம்

...வும் படிப் ...ர்ச்சியடைந் ... ளர்ச்சியின்னு ...ளின அடிப் ...இலவற்றை ...ந்தது. ...ர் சங்கம்

ஆரம்பிக்கப்படுமுன்னர் வர்த்தக ஊழியர் ஒருவர் வாரத்தில் ஏழு நாட்களும் வர்த்தக நிலையங்களில் பணிபுரிய வேண்டி இருந்தது. சூரியன் உதயமாகும்போது திறக்கப் படும் கடைகள் சூரியன் அஸ்தமித்து நெடுநேரத்துக்குப் பின்னரே பூட்டப்பட்டன. வர்த்தக ஊழியர்கள் சராசரி நாளொன்றுக்கு 12 மணித்தியாலங்களுக்கு மேல் பணி புரிய வேண்டி இருந்தது. இதை தட்டிக் கேட்டால் அவன் தொழில் பறிபோய் விடும். வருடத்தில் 365 நாட்களும் அவன் வேலைசெய்ய வேண்டி இருந்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன? 8 மணித்தியால வேலை வாரத்தில் 1 1/2 நாள் விடுமுறை இவற்றைவிட வருடத்தில் 21 தேசிய விடுமுறைகள் இவற்றை எப்படி பெறமுடிந்தது. வர்த்தக ஊழியர் சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்ததின் மூலம் எம்மால் இதை பெறமுடிந்தது.

பட்டுள்ளது. வர்த்தக ஊழியர் சங்கம் ஆரம்பிக்கப்படமுன்னர் ஊழியர்களின் வேதனத்தை வர்த்தகர்களே தம் இஷ்டப்படி தீர்மானித்தார்கள் ஆனால் இன்று ஊழியர்களின் வேதனத்தை வர்த்தக ஊழியர் சங்கம் நிர்ணயிக்கும்

### என். இராமச்சந்திரன்

(தலைவர், வ. வ. ஊ. சங்கம்)

வர்த்தக ஊழியர்களின் வேதனத்தைப் பொறுத்த வரையிலும் முன்னர் இருந்த நிலையிலிருந்து இன்றைய நிலைமை எவ்வளவோ மாறுதலடைந்துள்ளது... அளவுக்கு நிலைமை முன்னேறியுள்ளது. இன்று அதிகமான ஊழியர்கள் 1850 ரூபாவுக்கு மேல் வேதனம் பெறுகின் 4-ம் பக்கம் பார்க்க,

...பை



### நல்லை ஆதீனத்தின் ஆசிச் செய்தி

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்க அன்பர்கள் அதன் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா எடுக்கவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி. இச் சங்க அன்பர்கள் தளர்வுறுது பொதுநல சேவைகள் ஆற்றி வருவதை நாம் அறிவோம். வர்த்தகர் இல்லாது வாழ்வு இல்லை. மேலும் ஊழியர்களின் திடமான ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இன்றேல் வர்த்தகம் உயர்வுறாது. வர்த்தக உரிமையாளர்களும் ஊழியர்களின் நலம் பேணி பிரமாது நடந்துகொள்ளவேண்டும். இதில் நிறைவான இறை (4ம் பக்கம் பார்க்க)

—ஸ்ரீலஸ்ரீ
குருமஹாசந்நிதானம்

### யாழ். வர்த்தக சங்கத்தின் ஆசிச்செய்தி

நல்ல விளைவுகளான செயற்பாடுகள் பாராட்டுக்குரியவை. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் இச்சங்கம் ஊழியர்களின் நலன்கருதி திறம்பட தனது சேவைகளை முன்னெடுத்துச் சென்றுள்ளது. இது மிகவும் பாராட்டுக்குரியது. வருங் காலத்தில் ஊழியர்களின் நலன்கருதி மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து பல பேரும் போற்றக் கூடியதாக வளர்ந்து மிகப் பலம் மிக்க சங்கமாக உருவாக (4-ம் பக்கம் பார்க்க)

வே. சிற்சபேசன்,
தலைவர்

நா. த. அன்னலிங்கம்,
பொதுச்செயலாளர்)

### யாழ். மாநகர சபை ஆணையாளர் வாழ்த்து

வர்த்தக ஊழியர்களது உரிமையைப் பெற்றுக் கொடுக்க வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் முன்னின்று உழைத்து வருவது யாவரும் அறிந்ததே. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந் நாட்களில் மிகக் குறைந்த சம்பளத்தைப்பெறும் வர்த்தக ஊழியர்களுக்கு, அரசஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தினையொத்த சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதற் (4-ம் பக்கம் பார்க்க)

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

### தொழிலாளர் சக்திக்கு இணையில்லை

வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி விசேட மலர் ஒன்றை வெளியிடப்படவிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். உலகில் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு தமது (4-ம் பக்கம் பார்க்க)

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

## ...ட்டு விழா சிறக்க வாழ்த்துவோர்

...யம்

எஸ். ரி. மெடிக்கல்ஸ்
490, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

திருலிங்கநாதன்
வர்த்தக நிலையம்
சி. எஸ். கே.-கட்டிடம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விஷ்ணு விஹார்
சைவ உணவகம்
பெரிய கடை. யாழ்ப்பாணம்.

பிள்ளையார்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ கபல் செரமிக்ஸ்
37, அருச்சுன வீதி
யாழ்ப்பாணம்

இயந்திரம்ஸ்
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

நியு சாந்தி
நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நியுட்டன் ரேட் சென்ரர்
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

கணேசானந்தாஸ்
பிடவை மாளிகை
நவீன சந்தை,
15, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வி. கே. இராசரத்தினம்
95 அருச்சுன வீதி,
யாழ்ப்பாணம்.

பேபி நீட்ஸ்
நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்

ரவர்
கோப்பி பார்
324, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சித்தி விநாயகர்
ஸ்ரோர்ஸ்
234 (76), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### அனைவருக்கும் நன்றி

இதுவரை காலமும் இக்கட்டான பல சூழ்நிலைகளிலும் பல சிரமங்களின் மத்தியிலும், பல விதமான முன்னேற்ற நடவடிக்கைகளை ஊழியர்களுக்கும், மக்களுக்கும் எமது சங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருந் (4ம் பக்கம் பார்க்க)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்

வாழ, வளர

**எமது நல் வாழ்த்துக்கள்**

## கணேசன் ஸ்ரோர்ஸ்

201, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## ஸ்கை ரேஸ்

**ஒலிப்பதிவு கூடம்**

இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறிசக்தி வர்த்தக நிலையம்

310 ஏ, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ். சொப்பிங் சென்ரர்

440, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

## மு. குமாரசாமிபிள்ளை

**வர்த்தக நிலையம்**

120, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2857)



## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:

03 05-1953

★0★0★

உதிர்வு:

06-02-1983



அமரர்

## முத்துத்தம்பி நவஜீவன்

எங்கள் அன்புத் தெய்வமே ஆண்டு பத்து சென்றாலும் தங்கள் நினைவு மாறாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

"ஜீவகம்",
சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி.

(சி 7207)


### நல்லை ஆதீனத்தின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தி உடையோர் ஒருகாலமும் பிறரது நன்மைகள் புரிவர். வர்த்தகம் சிறப்புறுவதும் தாழ்ந்துபோவதும் ஊழியர்கள் கையிலுள்ளது.

இச்சங்க அன்பர்களின் பொதுநலப் பணிகள் மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென பரம்பொருளின் பாதார விந்தங்களைத் தியானித்து எல்லோருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

### தொழிலாளர் சக்திக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக்காகக் கிளர்ந்து எழுந்து போராடியதன் மூலம் வரலாறு படைத்துள்ளனர். சங்கத்தின் ஊடாக உறுப்பினர்கள் ஒன்று திரண்டு மண்ணின் விடிவுக்காகப் போராட வாழ்த்துகிறேன். தொழிலாளர் சக்திக்கு இணையேதும் இல்லை.

### அனைவருக்கும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமை பெரும் சாதனைகளுக்கு ரியதொன்றே. இந்தச் சாதனையைப் படைத்த செயல் திறன் மிக்க தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் பல சாதனைகளைப் படைப்பதுடன் பல தொழிலாளரின் காவலனாய் எமது சங்கம் விளங்க ஆவன செய்வோமென உறுதி பூணுவோம்.

ச. தியானேஸ்வர சர்மா
சங்கபொதுச்செயலாளர்

### யாழ். மாநகரசபை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பாடுபட்டு வரும் இச் சங்கம் வர்த்தக ஊழியர்களுக்குரிய மேலதிகநேர வேதனத்தையும், வாரத்தில் 1½ நாள் விடுமுறையையும் பெற்றுக் கொடுப்பதில் கணிசமான வெற்றியைப் பெற்றிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இச்சங்கமானது அங்கத்தவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுவதோடு நில்லாமல் இன்னலுற்றிருக்கும் எம்மக்கள் நலனிலும் அக்கறை கொண்டு செயற்படுவது பாராட்டுக்குரியது.

இச்சங்கம் மேலும் வளர்ச்சி பெற்றுத் தனது சேவையைத் தொடரவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.


## அழைப்பு

## கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். அடைக்கலமாதா கோவிலில் 1993-02-06 இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும் திருப்பலிப் பூசையிலும் முற்பகல் 11.00 மணிக்கு வீட்டில் இடம்பெறும் ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

★ நன்றி ★

அன்புடன்
மனைவி: திருமதி ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார்,
தாய்: திருமதி இராசலச்சுமி சதாசிவம்,
அண்ணா: திரு சதாசிவம் காந்திதாசன்
மற்றும் உறவினர்கள்.

128/6, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(சி 7203)


### பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட இந்த 23 பேரும் இன்று யாழ் நகருக்கு அழைத்து வரப்படலாமென்று தெரியவருகின்றது. (வி)

### தமிழ்நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் விடுதலைப் புலிகள் போராடுவதுபோல், தமிழ் நாட்டிலும் போராட்டங்கள் வெடிக்கும் என்றும் பேராசிரியர் பேரன் தெரிவித்துள்ளார். (இ-வி)

### 680 மெ. தொன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு நெருக்கடி குறித்து விளக்குகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதைய சந்தைநிலவரங்களின்படி நாட்டரிசி 294 வீதமாகவும் மா 238 வீதமாகவும் சீனி 203 வீதமாகவும், மண்ணெண்ணெய் 1900 வீதமாகவும் தேங்காய் எண்ணெய் 211 வீதமாகவும் தீப்பெட்டி 700வீதமாகவும், பருப்பு 172வீதமாகவும் லக்ஸ்பிறே 192 வீதமாகவும் உயர்வடைந்துள்ளன.

மேலும் யாழ். குடாநாட்டிற்கு தேவைப்படும் 12 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசிய பொருட்களுள் பருத்தித்துறையிலிருந்து குமாரி, மற்றும்குமண கப்பல் ஊடாக 6000 மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருட்களே கொண்டுவரப்படுகின்றன.

ஆனால் காங்கேசன்துறை பாதை திறக்கப்பட்டு வாரம் இருதடவைகள் 25 லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள் எடுத்து வரப்பட்டாலும் 4 ஆயிரம் மெற்றிகதொன் உணவுப் பொருள்களேயே எடுத்துவரமுடியும்.

எனவே மேலும் 2 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் பற்றாக்குறையாக இருக்கும்எனவும்ஜனாதிபதிக்கு இதுதொடர்பாக மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாகவும் 3 கப்பல்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக அத்தியாவசிய சேவையாளர் நாயகத்திடம் எடுத்து விளக்கப்பட்டதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (இ-க)

### யாழ். வர்த்தக சங்கத்தின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டு சங்கத்தின் சார்பில் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### வளர்ச்சிப் பாதையில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றார்கள். இன்றைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதாது என்பதை நாம் ஏற்கவேண்டும். எனினும் எமது சங்க பலத்தின் மூலம் அவற்றின் நடவடிக்கைகள் மூலம் மேலும் சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க முடியுமென திட்டவட்டமாக நம்புகிறோம்.

இன்று மேலதிக வேதனம் கொடுக்கப்படவேண்டுமென்ற கொள்கையை வர்த்தகர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதன் பயனாக பெரும்பாலான வர்த்தக ஊழியர்கள் மேலதிக வேதனத்தை பெற்றுக்கொள்ளுகின்றார்கள்.

நாம் வர்த்தகர்களிடம் வர்த்தக ஊழியனுக்கு சேர வேண்டிய நியாயமான உரிமைகளையே கேட்கின்றோம் அப்படி கேட்கும்போது நாம் பலமான நிலையிலிருந்து கேட்கும்போது தான் அது கிடைக்கும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே எமக்கு வாழ்வளித்த வாழ்வளிக்கும் வர்த்தக ஊழியர் சங்கத்தைப் பலப்படுத்துவோம். வெற்றி பெறுவோம்.

## பேரவை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழீழ கல்விக் கழக அலுவலகத்தில் நடைபெறுமெனவும் சகல அங்கத்தவரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பேரவையின் செயலாளர் கேட்டுள்ளார்.

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் 2 வது ஆண்டுமலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு என் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### ஓமந்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுள்ளனர்.

சி. சூரியகலா (20 வயது) கனகராயன்குளம், ஆ. ஜெகதீஸ்வரி 39 வயது) பெரியகல்லாறு மட்டக்களப்பு, க. பத்மா (37 வயது) பெரிய கல்லாறு. ச. காந்திமலர் (37 வயது) துறைநீலாவணை த. சின்னத்தங்கம் 39 வயது) பெரியகல்லாறு, பருத்தித்துறையைச்சேர்ந்த சிறிலோகநாதன் (35 வயது) ஆகியோரே பலத்த காயங்களுடன் பெரும் சிரமத்திற்கு மத்தியில் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

மேற்படி பொம்மர் தாக்குதலின்போது பலியான மூவரினதும் சடலங்களும் எடுத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

### தேர்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீது பெரும் நெருக்குதல்கள் அரச அதிகாரிகளால் தொடுக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சண்டே ரைம்ஸ் லங்கா தீப ஆகிய பத்திரிகைகளுக்கு அரசு வழங்கிய விளம்பரங்களை நிறுத்தியுள்ளதனையடுத்து தனியார் நிறுவனங்களும் தமது விளம்பரங்களை அவற்றுக்கு வழங்குவதை நிறுத்தியுள்ளனவாம்.

ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் சுதந்திரமாக இயங்கும் செய்தித்தாள்கள் நமது அரசை கவிழ்க்க முயல்வதாகவும் நமது அரசின் பொருளாதார கொள்கைகளை தாக்கி வருவதாகவும் குறை கூறியிருந்தார்.

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாத இடங்களில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் ஊரடங்குச்சட்டம் மறுஅறிவித்தல்வரை தொடர்ந்து அமுலில்இருக்கும் என்றும் கூட்டுப்படைத்தலைமையகம் நேற்று அறிவித்தது. (வ)

### சிறுவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றனர்.

முதற்கட்டமாக நேற்று முன்தினம் புலோலிப்பகுதியிலும் நேற்று சுழிபுரம் பகுதியிலும் இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

3 மாதம் முதல் 3 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆய்விற்குட்படுத்தப் படுகின்றனர் என்றும் ஆய்வின் முடிவுகள் கணனிப் பொறியில் பதியப்பட்டு அறிக்கை வடிவில்வெளிநாட்டு தொண்டர்ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

1976ம் ஆண்டிற்கு பின்னர் தற்பொழுது இவ் ஆய்வு மேற்கொள்ளபபடுவது குறிப்பிடத்தக்கது. (இ-க)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இவ்வோலிக் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, SriLanka under Licence Nnmber B/10336/B